<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்</u>
<u>அ.வ.எண். 128/2017</u>

பெயர் : மணிகண்டன்
சாட்சி – பி.வா.சா–1 நாள்: 06.02.2026

---

**<u>குறுக்கு விசாரணை (வாதி தரப்பு)</u>**

1. வாதி பழனியம்மாள் இந்த வழக்கை சொத்து வேண்டும் என்று தாக்கல் செய்துள்ளார். வாதி காலம் சென்ற ராமராஜ் என்பவரின் மனைவி என்றால் சரிதான். 2 மற்றும் 3 வாதிகள் காலம்சென்ற வாதி பழனியம்மாளின் வாரிசுகள் என்றால் சரிதான். தாவா சொத்து 15.08.1922 தேதியிட்ட பி.வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தின் படி பேச்சியம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்து எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2. சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 28 அகலமும், 32 அடி நீளமும் உடையது. நான் சொல்லும் நீள அகலத்தின் படி 896 சதுரடிகள் வரும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தின் படி பேச்சியம்மாள் கிழமேல் 20 முழமும் தென்வடல் 15 முழமும் தான் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தின் படி பேச்சியம்மாள் கிரையம் பெற்ற விஸ்தீரணம் 675 சதுரடி மட்டும் தான் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கிரையம் பெற்றதை விட பட்டாவில் அதிகமாக உள்ளதற்கு நத்தம் பட்டா வழங்கிய படி அனுபவத்தில் இருந்த பகதி என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. வாதி பழனியம்மாள் தாவா சொத்து 3 ல் 1 பங்கு பாகம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். பேச்சியம்மாள் கிரையம் பெற்ற சொத்தை பொறுத்து எந்த ஒரு ஏற்பாடும் செய்து வைக்காமல் இறந்து விட்டார் என்றால் சரிதான். பேச்சியம்மாளுக்கு நடராஜன் என்ற மகனும், பழனியம்மாள் என்கிற வீரம்மாள் மற்றும் பொன்னியம்மாள் என்ற இரண்டு மகள்களும் வாரிசுகள் என்று எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளது உண்மை தான்.

4. பேச்சியம்மாளின் வாரிசு சான்றிதழ் எதுவும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் பழனியம்மாள் என்கிற வீரம்மாளின் வாரிசு என்றால் சரிதான்.

வாதிகள் பேச்சியம்மாளின் மகன் நடராஜ் என்பவரின் மகனான ராமராஜின் வாரிசுகள் என்றால் சரிதான். பொன்னியம்மாளின் வாரிசுகள் தாவா சொத்தின் ஒரு பகுதியில் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். பேச்சியம்மாளின் மகன் மற்றும் மகள்கள் இடையே தற்போது வரை எந்த பாகப்பிரிவினையும் தாவா சொத்தை பொறுத்து செய்துகொள்ளப்படவில்லை என்றால் சரிதான்.

5. நடராஜனின் மகனான ராமராஜ் என்பரை தவிற வேறு வாரிசுகளும் அவருக்கு உள்ளார்கள் என்பதை சொல்லியுள்ளதை காண்பிப்பதற்கு அவரது வாரிசு சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1ம் வாதியை தவிர காலம் சென்ற ராமராஜிற்கு மற்றொரு மனைவியும் அவர் மூலம் குழந்தைகளும் உள்ளார்கள் என்பதை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். ராமராஜிற்கு மற்றொரு மனைவி மற்றும் குழந்தைகள் உள்ளார்கள் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

6. ராமராஜ் அவரது முதல் மனைவி உயிருடன் உள்ள போதே இரண்டாவதாக 1ம் வாதி பழனியம்மாளை திருமணம் செய்து கொண்டார் என்று முதல் மனைவியின் சார்பில் புகார் ஏதேனும் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றும் ராமராஜிற்கு 1ம் வாதி மட்டுமே ஒரே மனைவி என்றும், 2 , 3 வாதிகள் குழந்தைகள் என்றும், புஷ்பா என்ற மனைவியும், தனம் என்ற மகளும் இருந்தார்கள் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7. எனது தந்தையின் தாயார் பெயர் வீரம்மாள் என்கிற பழனியம்மாள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.3 இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழில் பழனியம்மாள் என்று மட்டும் தான் உள்ளது என்றால் சரிதான். வீரம்மாள் என்கிற பழனியம்மாள் என்று குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரிதான். நடராஜின் 3வது மகன் கோபால் என்பவருக்கு சரோஜா என்ற மனைவியும், பன்னீர் செல்வம் என்ற மகனும், பாரதி என்ற மகளும் உள்ளார்கள் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

8. வீரம்மாளின் மற்ற வாரிசுகள் சேர்ந்து எனது தந்தையான சண்முகம் என்பவருக்கு பி.வா.சா.ஆ.4 பொது அதிகார பத்திரம் வீரம்மாளின் 3ல் 1 பங்கு பாகத்தை

பொறுத்து எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு பி.வா.சா.ஆ.1 ஆவணம் தான் மூல ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 பொது அதிகார பத்திரத்தில் மூல ஆவணமாக பி.வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தை காட்டாமல் பட்டா படி பாத்தியப்பட்டதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சொத்து விவரத்திலும், சொத்தின் அளவுகளை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

9. எனது தந்தை பொது அதிகார பத்திரத்தின் அடிப்படையில் பி.வா.சா.ஆ.5 கிரையப்பத்திரத்தை எனது பெயருக்கு எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 கிரையப்பத்திரத்தில் பி.வா.சா.ஆ.4 பொது அதிகார பத்திரத்தில் குறிப்பிடப்படாத அளவுகளையும், விவரங்களையும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 மற்றும் பி.வா.சா.ஆ.5 ஆவணங்கள் எழுதிக் கொடுக்கப்பட்ட தேதிகளில் 3 பாகஸ்தர்களுக்குள் பாகப்பிரிவினை எதுவும் செய்து கொள்ளப்படவில்லை என்றால் சரிதான்.

10. பாகப்பிரிவினைக்கு முன்பாகவே பி.வா.சா.ஆ.5 ஆவணமானது செக்குப்பந்தி குறிப்பிட்டு தான் எனக்கு கிரையம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சொத்து விவரத்தில் தெற்கே உள்ள சொத்து ராமராஜிடம் உள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ராமராஜ் 1ம் வாதியின் கணவர் ராமராஜ் என்றால் சரிதான். பேச்சியம்மாளின் 3வது மகளான பொன்னியம்மாளின் மகன் பொன்னுசாமி என்பவர் தனது மகன் வழி பேத்தி நாகரத்தினம் என்பவருக்கு பி.வா.சா.ஆ.7 உயில் சாசனம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான்.

11. பி.வா.சா.ஆ.7 உயிலிலும், பாக்ப்பிரிவினைக்கு முன்பாகவே செக்குப்பந்தி குறிப்பிட்டு தான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4, பி.வா.சா.ஆ.5 மற்றும் பி.வா.சா.ஆ.7 ஆகிய ஆவணங்கள் கூட்டு பாகஸ்தர்களுடன் பாகப்பிரிவினை செய்யாமல் தன்னிச்சையாக குறிப்பிட்ட செக்குப்பந்திகளுடன் எழுதப்பட்டுள்ளதால் மேற்படி ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பழனியம்மாளின் வாரிசுகள் மற்றும் பொன்னியம்மாளின் வாரிசுகள் மற்றும் வாதிகளுக்கு தலா 3ல் 1 பங்கு பாகம் உரிமை உள்ளது என்றால் வாதிகளுக்கு மட்டும் 3ல் 1 பாகம் பாத்தியம் இல்லை. அவர்களுடன் மேலும் மற்ற வாரிசுகளுக்கும் உரிமை உள்ளது.

12. நடராஜன் வாரிசுகளை தவிற மற்றவர்கள் தங்களுக்கும் உரிமை உள்ளது என்று தங்களை இந்த வழக்கில் இணைத்துக் கொள்ள வில்லை என்றால் சரிதான். வாதிகள் தான் சேர்க்கவில்லை. இந்த வழக்கு நடந்த வருவதை நான் அவர்களிடம் தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன். அவர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்ப்பதற்கு நான் எதுவும் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

13. பி.வா.சா.ஆ.8 தாவா சொத்திற்கு உண்டான கணினி சிட்டாதான் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.8 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள ராமராஜ் மனைவி என்பது காலம் சென்ற 1ம் வாதி தான் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7 உயில் ஆவணம் நடைமுறைக்கு வந்துவிட்டதா என்றால் வந்துவிட்டது. பி.வா.சா.ஆ.7 உயில் எழுதி வைத்த பொன்னுசாமி 24.02.1997 தேதியில் காலமாகி விட்டார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.8 சிட்டாவில் நாகரத்தினம் பெயர் இடம்பெறவில்லை என்றால் சரிதான்.

14. தற்போது வரை எனது பெயருக்கும் பட்டா மாற்றம் பெறவில்லை என்றால் சரிதான். எனது பெயருக்கும், நாகரத்தினம் பெயருக்கும் பட்டா மாற்றம் செய்யாததற்கு காரணம் எங்கள் பெயருக்கு செக்குப்பந்திகள் குறிப்பிட்டு ஆவணங்கள் எழுதி வைக்கப்பட்டது தான் என்றால் சரியல்ல. நாங்கள் பட்டா மாற்றத்திற்கு விண்ணப்பம் கொடுக்காததால் தான் மாற்றப்படவில்லை. 3 பேர் பெயருக்கு மட்டும் தான் பட்டா இருந்தது என்பதை நான் 2017 ம் ஆண்டில் தெரிந்து கொண்டேன்.

15. ராமராஜ் மனைவி பழனியம்மாள் பெயருக்கு மட்டும் பட்டா வழங்கப்பட்டுள்ளதற்கு எதிராக நான் எந்த மேல்முறையீடும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் அனுபவித்து வரும் பகுதிக்கான வரி ரசீது எனது பெயரில் தான் உள்ளது. பி.வா.சா.ஆ.10 குடிநீர் கட்டண ரசீது பேச்சியம்மாள் பெயரில் தான் உள்ளது என்றால் அது நான் கட்டியது அல்ல நடராஜனின் மகன் பழனிச்சாமி கட்டியது. நான் எனது முதல் விசாரணையில் பி.வா.சா.ஆ.10 குடிநீர் கட்டணம் பழனிச்சாமி கட்டியது என்று சொல்லி உள்ளேனா என்றால் இல்லை.

16. நான் செலுத்தாத கட்டணத்தை நான் செலுத்தியதாக ஆவணம் தாக்கல் செய்துள்ளது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.11 கந்தாய ரசீது

ராமராஜ் பெயரில் உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வரி ரசீதுகள் முறையான ஆவணங்களின் அடிப்படையில் செலுத்தப்படாததால் அவை ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.15 வழக்கிற்கு பிந்தைய ஆவணம் என்பதால் ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல.

17. வா.சா.ஆ.1 நத்தம் சிட்டாவில் ராமராஜ் பெயர் இடம் பெற்றுள்ளது என்றால் சரிதான். ராமராஜ் தனக்கு பாத்தியப்பட்ட 3ல் 1 பங்கு பாகத்தை பொறுத்து தனது மனைவியான 1ம் வாதி பெயருக்கு வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ–2 ஆவணத்தில் முழு செக்குப்பந்தி குறிப்பிட்டு நடு பாகத்தை பொறுத்து எழுதப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

18. வா.சா.ஆ.2 ஆவணம் செல்லாது என்று எதிர்கோருரிமை எதுவும் நான் கோரவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணம் நடைமுறைக்கு வந்து 1ம் வாதி சுவாதீனத்தில் இருந்து வந்தார் என்றும், அவரது இறப்பிற்கு பின்னிட்டு 2, 3 வாதிகள் கூட்டு சுவாதீனம் மற்றும் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. வாதிகளுக்கு பாகம் கிடைக்கக்கூடாது என்பதற்காக எதிர் வழக்காடுகிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் பாகம் கேட்டு அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். வாதிகள் கோரிய படி அவர்களுக்கு உரிய 3ல் 1 பாகத்தை பிரித்து கொடுத்து தனித்த சுவாதீனம் கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN Digitally signed by V KALIDASAN Date: 2026.02.06 18:13:07 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.